Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 22-6-1946 ஆனிமீ 8உ { மலர் 37

## எது தேசத்துரோகம்?

[பெரியாரவர்கள் 12, 13-6-46 தேதிகளில் பள்ளிகொண்டை, வேலூர் முதலிய பொதுக்கூட்டங்களில் காங்கரஸ் கொள்கைகளுக்கும் நம் கொள்கைகளுக்கும் உள்ள பேதத்தை எடுத்துக்காட்டி பேசியது. 15-6-46 "விடுதலை"யில் வந்ததின் சுருக்கம்]

தோழர்களே! இந்தியாவைவிட்டு பிரிட்டிஷ் ஆட்சி அடியோடு விலகப் போகிறதா இல்லையா? அது காந்தி கோஷ்டியார், பிரிட்டிஷ் தூது கோஷ்டியார் பேசிக்கொள்ளும் இரகசியப் பேச்சின் தத்துவத்தைப் பொறுத்தது.

காங்கரசார் பதவி ஏற்ற இந்தக் காலத்தில் மக்களுக்குள்ளாவது ஒரு சமரச முடிவு இல்லையானால் நாடு சீரழியப்போவது நிச்சயம். இதனால் பிரிட்டிஷ்காரருக்கு நஷ்டமில்லை. அவர்கள் ஆதிக்கம் இன்னும் பல நாளைக்கு பலப்படத்தான் இடமாகும். ஆரியர்களுக்கும் கஷ்டமில்லை. ஆரியர் பிரிட்டிஷாருடன் இன்னும் பலமான ஒப்பந்தம் செய்து கொள்ளுவர். காந்தியாருக்கும் குறைவு வராது. அவர் அவதாரக் கடவுள்தன்மை மாறி உண்மைக் கடவுளாகிவிடுவார். தொல்லைப் படப்போவது நாம்தான். முஸ்லிம், திராவிடர் ஷெட்யூல் வகுப்பார் ஆகியவர்களும், இக்கூட்டத்தில் உள்ள ஏழை, எளியவர், தொழிலாள கூலியாட்கள் ஆகிய பாட்டாளி மக்களும்தான்—அதோடு மாத்திரமல்ல நம் கடமைகளும் இன்றைய மந்திரி (ஆரிய) அதிகாரத்தை ஒழித்து முன் போலவே (டெலிவரன்ஸ்) விடுதலை நாள் கொண்டாடவேண்டியதே ஆகும். இந்த முயற்சிக்கு முன் போல் நம்மில் 1000, 2000 பேர் [illegible] இருப்பதாலே ஆகக்கூடிய காரியமாயிராது. ஏராளமான மக்கள் ஈடுபடவேண்டி இருக்கும்.

கண்டிப்பாக இந்து முஸ்லிம் இரத்தம் சிந்துதலும், மேல்ஜாதி, கீழ்ஜாதி இரத்தம் சிந்துதலும், சோம்பேறி பாட்டாளி ரத்தம் சிந்துதலும், முதலாளி தொழிலாளி இரத்தம் சிந்துதலும் நடந்துதான் தீரும். இப்போதே எங்கும் தொழிலாளிகள் ஸ்ட்ரைக், ரயில்வே சிப்பந்திகள் தபால் சிப்பந்திகள் ஸ்ட்ரைக், போலீசார் ஸ்ட்ரைக், கணக்குப்பிள்ளை பட்டா மணியக்காரர்கள் ஸ்ட்ரைக் என்பவைகள் உற்சாகம் பெறுகின்றன. இனி இராணுவத்தினர் ஸ்ட்ரைக்கும் ஏற்படலாகக்கூடும். இப்படி ஆகுமானால் நம் நிலை என்ன ஆகும்? பார்ப்பனர்கள் இவ்வளவுக்கும் இப்போதிருந்தே பந்தோபஸ்தாக இருக்க முயலுகிறார்கள். இரு கட்சியிலும் அதாவது ஸ்ட்ரைக்கிலும், சர்க்காரிலும் சரிபாதியாய் கலந்து அமைந்துவிட்டார்கள். நமக்கு சாந்தியோ, சமாதானமோ இல்லாமல் நாம் ஒருவரை ஒருவர் துன்பப் படுத்திக் கொல்லப் போகிறவர்களாக ஆவோம்.

உண்மையில் நான் திராவிடத் தோழர்களை அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும், இந்து, முஸ்லிம் கலவரத்தில் கட்சிப் பிணக்கில் அவர்களுக்கு ஏன் சம்பந்தமிருக்கவேண்டும்; அதுவும் ஆரியர்களும் முஸ்லிமும் செய்துகொள்ளும் போராட்டத்தில் திராவிடன் ஏன் கலக்கவேண்டும்? என்கிறேன்.

இன்றைய அரசியல் போராட்டம் என்பது என்ன? இந்தியன் வெள்ளையன் போராட்டமா? இல்லையே. காந்தியாரே சொல்லிவிட்டாரே பிரிட்டிஷார் நல்லவர்கள், நல்லெண்ணமுடையவர்கள், அவர்கள் நல்லெண்ண விஷயத்தில் சந்தேகப்படாதீர்கள் என்று. அதுவும் பிரார்த்தனையில் சொல்லிவிட்டாரே. இது கடவுள் அனுமதியின்பேரில் சொல்லப்பட்டதாகத்தான் இருக்கமுடியும். ஆகவே இன்றைய இந்தியப்பிரச்னை சுயராஜ்யப் பிரச்னை அல்லவே, சுதந்திரப் பிரச்னை அல்லவே. ஆங்கிலேயே அன்னியன் பிரச்னை அல்லவே. இந்து, முஸ்லிம் பிரச்னையாகத்தானே ஆகிவிட்டது. இப்போது இந்துக்களுக்கு முஸ்லிம் அன்னியனாகவும், முஸ்லிமுக்கு இந்து அன்னியனாகவும் தானே காணப்படுகிறான். இந்து, முஸ்லிம் ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதும், முஸ்லிம், இந்து ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதும், இந்து மதம் காப்பாற்றப்படுவதும், இஸ்லாம் காப்பாற்றப்படுவதும்தானே இன்று சுதந்திரப் போராக ஆகிவிட்டது.

இந்தப் பிரச்னையில்தான் பிரிட்டிஷ் தூதுகோஷ்டி தோல்வி அடைவதாக இருக்கிறதே அல்லாமல் வெள்ளையன் வெளியேறுவதில், விட்டுவிட்டுப் போகிற அல்லது எடுத்துக்கொண்டு போகும் சாமான்கள் பற்றிய தகராறு இருந்துவருகிறது என்று யோசித்துப்பாருங்கள். நேற்று காங்கரஸ் பத்திரிகைகள் எழுதிவிட்டன. என்னவென்றால் முஸ்லிம் ஆட்சியைவிட "வெள்ளை ஆட்சியே மேல்" என்று எழுதிவிட்

டன. இந்த கருத்தின்மீதுதானே ஆரியர்கள் முன் காலத்தில் நல்ல கெட்டியான முஸ்லிம் ஆட்சி இருக்கும்போது வேவல் (ஆங்கில) ஆட்சியை இங்கே அழைத்துவந்து தங்களுக்கு ஏற்றபடியான மறு ஆட்சியாக அமைத்துக்கொண்டார்கள் (என்று சரித்திரம் கூறுகிறது) இந்த நிலையில் இன்று இந்திய சுயராஜ்யப் பிரச்னை மாறாடு முறிவது என்பது முஸ்லிம் ஆதிக்கம் இல்லாமல் இருக்கவும், வேவல் (ஆங்கில) ஆட்சியை நிலைநிறுத்தவும் அல்லாமல் வேறு என்ன காரியத்திற்கு?

காங்கிரஸ் கொள்கைப்படி அது உண்மையாக இருந்தாலும், பித்தலாட்டமாக இருந்தாலும் எங்களுக்கு இன்று சண்டை இல்லை. அவைகளை வேண்டுமானாலும் நாம் ஒப்புக்கொள்ளுவோம். உண்மை சொல்லுகிறேன். ஆனால் நாம் காங்கிரஸ் கொள்கைக்கு மேற்கொண்டு இரண்டொரு திட்டம் வைத்து இருக்கிறோம். அதற்கு என்ன செய்வது? அதை காங்கிரஸ் திராவிடர்களாவது ஒப்புக்கொண்டால் போதுமே. அதற்கு ஒத்துழைக்க காங்கிரஸ் திராவிடர்கள் தலையாட்டினாலும் போதுமே. திராவிட கழகத்தை கலைத்துவிட்டு காங்கிரசையே பலப்படுத்த தயங்கமாட்டோம்.

**காங்கிரசுக்கும் நமக்கும் என்ன பேதம்?**

1. ஆரியன், திராவிடனை அடக்கி அழுத்திவைப்பதை, மறு ஆட்சி புரிவதை சுயராஜ்யம், தர்மராஜ்யம், ராமராஜ்யம் என்கின்றான்.

திராவிடன் ஆரிய ஆதிக்கத்தில் இருந்து மீண்டு தனித்தன்மை பெறுவதை சுயராஜ்யம் என்கிறான்.

2. காங்கிரஸ் அந்நியன் ஆதிக்கத்தில் இருந்து விலகவேண்டும் என்கின்றது.

நாமும், ஆம். அது சரி, அதுதான் முதல் வேலை என்கிறோம். ஆனால் அன்னியர் என்கின்ற பட்டியில் திராவிடனல்லாதவன் எவனும் அன்னியன் என்று விளக்கம் எழுதிக்கொள் என்கிறோம்.

3. காங்கிரஸ், அன்னியன் சுரண்டுதல் கூடாது என்கிறது.

நாம், ஆம் கூடாது என்கிறோம். ஆனால் அன்னியன் என்கின்றபடியால் அயல் மாகாணத்தவனும் அன்னியன் என்று எழுதிக்கொள் என்கிறோம்.

4. நம் நாடு பாரதநாடு என்கிறது காங்கிரஸ்.

நாம், நம்நாடு திராவிடநாடு என்கிறோம்.

5. ஆங்கிலேயன் தவிர மற்றபடி இந்தியன் என்ற பெயரால் எவன் பிழைத்தாலும், எவன் திராவிட நாட்டைக் கொள்ளைகொண்டாலும் சரி என்கிறது காங்கிரஸ்,

நாம், திராவிட நாட்டை திராவிடத்தில் நிரந்தரமாய் வாழும் திராவிட நாட்டுக் குடிகள் தவிர, பிர்லா, பஜாஜ், காந்தி, நேரு, படேல், பட்டாணி, குஜராத்தி, மார்வாடி, பனியா, சிந்தி, காஷ்மீரி, பட்டாண், மேமன், எல்லைப்புறக்காரன் எவரும் சுரண்டக்கூடாது என்கிறோம்.

6. இந்தியாவில் திராவிடம் உள்ளடங்கியது என்கிறது காங்கிரஸ்.

இந்தியா வேறு, திராவிடநாடு வேறு என்று பிரிக்கப்படவேண்டியது திராவிடத்தை என்கிறோம்.

7. இந்தியன் பட்ட ஜாதியல்ல, வெள்ளையன் உயர்ந்தஜாதி அல்ல இருவருக்கும் சமஉரிமை வேண்டும் என்கிறது காங்கிரஸ்.

ஆம்; இருவருக்கு மாத்திரமல்ல. மூவருக்கும் அதாவது திராவிடன், ஆரியன், வெள்ளையன் ஆகிய மூவருக்கும் சம உரிமை வேண்டும், திராவிடன் சூத்திரனல்ல, பறையன் அல்ல, தீண்டப்படாதவன் அல்ல. ஆரியன் பிராமணன் அல்ல, மேல்ஜாதி அல்ல, பூதேவன் அல்ல. சம உரிமையில், சம விகிதாச்சாரத்தில், சம போகபோக்கியத்தில், சம உழைப்பில் இருக்கவேண்டிய மக்கள் என்கிறது திராவிட கழகம்.

8 இந்தியா முழுமைக்கும் ஒரு சுயராஜ்யம் போதும் என்கிறது காங்கிரஸ்.

பிரிக்கப்பட்ட ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனி சுயராஜ்யம் வேண்டும்; மற்றதைப்பற்றி பேசாவிட்டாலும் திராவிட (சென்னை) மாகாணத்தைப் பொறுத்தமட்டில் தனி சுயராஜ்யம் ஏற்படுத்த வேண்டும் என்கிறது திராவிடர் கழகம்.

இவைகளைத்தானே முக்கியமாக எடுத்துச்சொல்லி பரிகாரம் செய்யும்படி கோருகிறது; இவைகளைக் கேட்பது எப்படி காங்கிரஸ் தேசபக்தர்களுக்கு தேசத் துரோகமாகும்? இவைகள் கேட்கப்படுவதால் எப்படி கிடைக்கப்போகும் சுயராஜ்யம் தடைப்பட்டுப்போகும் என்று கேட்கிறேன்.

நாங்கள் கேட்பவைகளுக்கு, சொல்லுபவைகளுக்கு ஆதாரம், அவசியம், பிரத்யட்ச அனுபவம், பொருத்தம் இல்லை என்று எந்த காங்கிரஸ் பக்தராவது சொல்லட்டுமே. ஜின்னா பிரிவினை கேட்டால் அவர் தேசத்துரோகி, முட்டுக்கட்டைவாதி. அம்பேத்கார் தனித்தன்மை, சமஉரிமை கேட்டால் அவர் தேசத்துரோகி, முட்டுக்கட்டைவாதி, கம்யூனிஸ்டுகள் பொருளாதார சம உரிமை கேட்டால் அவர்கள் ஒழிக்கப்படவேண்டிய இழிமக்கள். திராவிடர்கள் பாதுகாப்பு சமுதாய உரிமை கேட்டால் அவர்கள் தேசத்துரோகிகள், முட்டுக்கட்டைவாதிகள் என்று அழைக்கப்படுவதும், கலகம், குழப்பம், கல்வீச்சு, சாணி உருண்டை வீச்சு, மிருகக் கூப்பாடு, காலித்தனம் ஆகியவைகளும் தானா பரிகாரம் என்று கேட்கிறேன். தோழர்களே! கலகத்தில், காலித்தனத்தில் ஆரியன் எவனாவது சிக்கிக்கொள்கிறானா? திராவிடன் கையில் சாணி உருண்டையையும் கல்லையும் கொடுத்து திராவிடன் மீதே எறியச்சொல்லிவிட்டு மறைவில் இருந்து வேடிக்கைப் பார்க்கிறானே இதுவா விடுதலை முயற்சி? எனவே எங்களிடம் காங்கிரஸ் திராவிடர்கள் சந்தேகம்கொள்ள வேண்டியதில்லை. எங்கள் முயற்சி வெற்றிபெற்றால் காங்கிரஸ் திராவிடர்களுக்கும் பங்குண்டு. அம்பேத்கார் முயற்சி வெற்றிபெற்றால் காங்கிரஸ் திராவிடருக்கும் பங்குண்டு. காங்கிரஸ் முயற்சி வெற்றிபெற்றால் எங்களுக்கு என்ன உண்டு? சூத்திரப் பட்டம் போகுமா? பஞ்சமப் பட்டம் போகுமா? மனுசாஸ்திரம் ஒழியுமா? சமுதாயத்திலாவது சமயத்திலாவது சர்க்காரிலும் தீண்டாமை அண்டாமை, நுழையாமை, படியாமை பதவி கிட்டாமை ஆகியவை ஒழிந்து யாவரும் சம தொண்டாற்றும் தன்மை ஏற்படுமா? கெஞ்சுகின்ற பாவனையே கோருகிறோம். இத்துணையாகில் சோத

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# படிப்புவராத இனம்

[16-6-46 "திராவிடநாடு" இதழில் வந்த கட்டுரையின் சுருக்கம்]

படிப்புவராத இனம்! இந்தச் சொற்றொடரைப்போல வேறெதுவும் பள்ளி மாணவரின் இனம் உள்ளத்தைத் அலைத்திருக்காது, பட்டதாரிகளைப் பதைக்கச்செய்திருக்காது, இன விடுதலை கோருபவர்களின் இருதயத்திலே இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் இழிமொழி இது. பழிப்பிற்கிடமான இந்தப் பழிமொழியைக் கேட்கும்பொழுதெல்லாம் நம் முன்னத்திலே கோபமும் வேதனையும் புகைந்ததேயன்றி, அந்தச் சொற்களில் உள்ள உண்மையின் அளவை ஆராய நாம் முற்படவில்லை.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிதறிக்கிடக்கும் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலானவை சர்க்காராலும், சர்க்காரின் உதவியாலும் நடைபெறுபவை. அரசியலாரால் நடத்தப்படுகிறது என்றவுடன் கல்விக்குச் செலவிடப்படும் பணம் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்திலிருந்து செலவு செய்யப்படுவது என்று கூறத் தேவையில்லை. கல்விக்காகச் செலவிடப்பட்ட பொருள்தான் பல்கலைக் கழகங்களாகவும், கல்லூரிகளாகவும் ஆய்வுக்கூடங்களாகவும், ஆராய்ச்சி மன்றங்களாகவும், நூல்நிலையங்களாகவும், விளையாட்டு மைதானங்களாகவும், உயர்நிலை, நடுநிலை, முதல் நிலைப்பள்ளிகளாகவும் சிறப்புற விளங்குகிறது. ஆனால் வரிப்பணத்தின் பெரும்பகுதியைச் செலுத்துகிற ஏழை மக்களுக்குக் கல்வியின் வாடை கூட அடிக்கவில்லை. மக்கள் தொகையில் நூற்றுக்கு மூன்றாக உள்ள முப்புரிக் கூட்டத்தினரிடம்தான் கல்வி மங்கை உறவாடுகிறாள்.

அரசியலாரால் வசூலிக்கப்படும் வரிப்பணம் செலவு செய்யப்படும் விதமும், அவ்வாறு செலவுசெய்யப்படும்பொழுது தனக்குச் சரியான பங்கு—பலன் கிடைக்கிறதா என்று பார்ப்பதும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் உணர்ச்சியின் வேகத்தைக் குறிப்பிடுவன.

கடைசியாக வந்துள்ள சென்னை மாகாணக் கல்வியதிகாரியின் 1943—44ம் ஆண்டு அறிக்கையிலிருந்து பார்த்தால் அந்த ஆண்டில் கல்விக்காகச் செலவு செய்யப்பட்டுள்ள தொகை 7,22,53,225 ரூபாய் ஆகும். இவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ள ஏழுகோடி இருபத்திமூன்று லட்ச ரூபாய்களால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பலனை ஆராய்வோம்.

சென்னை மாகாணத்திலுள்ள எலிமெண்டரி, நடுநிலை, உயர்தரப்பள்ளிக்கூடங்களின் தொகை 37,090. இவைகளில் கல்விபெறும் மாணவர்களின் தொகை 26,73,080. முதல் வகுப்பிலிருந்து ஆறாவது பாரம் வரை ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள பிராமணர், பிராமணரல்லாதாரின் தொகை கீழ்வரும் கட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

| | பார்ப்பன மாணவர்கள் | திராவிட மாணவர்கள் |
|---|---|---|
| 1வது வகுப்பு | 47,332 | 7,43,312 |
| 2வது ,, | 36,581 | 4,73,575 |
| 3வது ,, | 33,074 | 3,71,487 |
| 4வது ,, | 31,378 | 3,10,799 |
| 5வது ,, | 31,717 | 2,81,357 |
| 1வது பாரம் | 20,014 | 74,273 |
| 2வது ,, | 17,960 | 55,699 |
| 3வது ,, | 16,801 | 45,376 |
| 4வது ,, | 12,159 | 20,565 |
| 5வது ,, | 10,163 | 15,748 |
| 6வது ,, | 9,433 | 13,387 |
| | 2,67,102 | 24,05,578 |

இந்த எண்ணிக்கையைப் பகுதிகளைப் பிரித்துப் பார்த்தாலும் சாதாரணமாகப் பார்ப்பன மாணவர்களின் தொகை நம் மாணவர்களின் தொகையைவிடக் குறைவாயிருக்கும்பொழுது, நாம் வருந்துவது ஏன் என்றுதான் தோன்றும். ஆனால் பார்ப்பனர்களின் தொகை நூற்றுக்கு மூன்று என்பதையும் மற்ற நூற்றுக்கு 97 ஆக உள்ள திராவிடர்களின் தொகை பார்ப்பனர் தொகையைவிட 32 பங்கு அதிகம் என்பதையும் மனத்தில் வைத்துப் பார்த்தால் நம்மவர்களின் கல்வியின் பிற்போக்கு வெளிப்படும். எல்லோருக்கும் ஒத்த உரிமையும், வாய்ப்பும் இருந்தால் பார்ப்பன மாணவர்களைவிட, நம் மாணவர்கள் 32 மடங்கு அதிகம் இருக்கவேண்டும். ஆனால் 1வது வகுப்பிலிருந்து 6வது பாரம்வரையில் படிக்கும் மாணவர்களின் தொகையில் அவர்களைவிடத் திராவிட மாணவர் தொகை 9 மடங்குதான் அதிகமாகும். அதுகூட எண்ணிக்கை அளவேயொழிய, படிப்பில் பலன் பெறுவோர் தொகையல்ல என்பதை மேலும் ஒருமுறை எண்ணிக்கைக் கட்டத்தைப் பார்த்தால் புலனாகும். முதல் வகுப்பில் பார்ப்பன மாணவர்கள் 47 ஆயிரம்தான். திராவிட மாணவர்கள் 7 லட்சத்து 43 ஆயிரம். உண்மையிலேயே மகிழ்ச்சி தரக்கூடிய எண்ணிக்கைதான். இந்த மகிழ்ச்சி 2வது வகுப்பு அறையில் நுழைந்ததும் மங்கிவிடுகிறது.

2வது வகுப்பில் பார்ப்பன மாணவர்கள் 36 ஆயிரம், திராவிட மாணவர்கள் 4 லட்சத்து 47 ஆயிரத்துக்கு குறைந்து விடுகின்றனர். பார்ப்பனர்களின் தொகையில் 11 ஆயிரம் குறைகிறது. திராவிட மாணவர்களில் 2 லட்சத்து 70 ஆயிரம் பேர்களைக் காணோம். 3வது வகுப்பில் நுழைந்ததும் மயக்கம் இன்னும் அதிகரிக்கிறது. வகுப்பு உயர உயரத் திராவிட மாணவர்கள் தொகை மீட்க முடியாத அளவுக்கு வீழ்ந்துவிடுகிறது. கடைசியாக 6வது பாரத்தில் நுழையும் பொழுது, பார்ப்பன மாணவர்கள் தொகை 9 ஆயிரமாகவும், திராவிட மாணவர்களின் தொகை 13 ஆயிரமாகவும் காணப்படுகிறது. கணக்கு எப்படி இருக்கிறது பாருங்கள். நூற்றுக்கு மூன்று விகிதமுள்ள பார்ப்பன மாணவர்கள் பத்தாவது வகுப்பில் 9 ஆயிரம், நூற்றுக்கு 97 உள்ள திராவிட மாணவர்கள் தொகை 13 ஆயிரம். கல்விமுறையில் சரியும் சமூக அமைப்பில் நீதியும் அரசியலதிகாரத்தில் நேர்மையும் இருக்குமானால் பத்தாவது வகுப்பில் பார்ப்பன மாணவர்கள் 9 ஆயிரம் என்று கூறும் பொழுது திராவிட மாணவர்கள் தொகை அதைவிட 32 மடங்கு, அதாவது 2 லட்சத்து 88 ஆயிரம் என்றிருக்கவேண்டும். ஆனால் இருப்பதோ 13 ஆயிரம். நீதி இல்லை; சமூக பொருளாதார, அரசியல் துறைகளில் நீதியில்லாத காரணத்தால்.

முதல் வகுப்பில் பெருவாரியாக

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் ஜூன்-மீ 22உ

# மந்திரிசபையில் கெட்டபுத்தி தோற்றம்

சென்னை மந்திரிசபை தனது நிஜமான நிறத்தோடு வெளிக்கிளம்ப துணிந்து முன் வந்துவிட்டதாகத் தெரிகிறது.

இன்றைய அரசியல் கொள்கையில் காங்கரசுக்கும் இம்மாகாண பார்ப்பனரல்லாதமக்கள் என்பவர்களுக்கும் இதுவரை இருந்துவந்த பேதங்களில் முதலாவதாக இருந்தது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்னும் கொள்கையாகும். இது இன்று இந்தியா முழுவதற்குமாக அரசியல் கொள்கைகளில் முக்கிய ஸ்தானம் பெற்றிருப்பதை மத்திய அரசாங்கத்தின் இடைக்கால சர்க்கார் அமைப்பில் உள்ள தகராறுகளைக்கொண்டு தெரியலாம்.

இப்போது நமது மாகாணத்தில் காங்கரஸ் மந்திரிசபை ஏற்பட்டதும் அது புதிதாக எவ்வித அனுகூலமும் இத்துறையில் செய்யவில்லை. ஆனாலும் முன் இருந்துவந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமையை ஒழிக்க சூட்சிசெய்ய ஆரம்பித்துவிட்டது. இது தோழர் ஆச்சாரியாரின் முன்னைய மந்திரிசபை நடவடிக்கையைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது. இந்த முறையைப் பின்பற்றுவதானால் இந்த மந்திரிசபை தொல்லைக்கு ஆளாகவேண்டி வரும் என்று எச்சரிக்கை செய்கிறோம். பல காரணங்களால் எவ்வித தகராறுமில்லாமல் சாதாரணமான தன்மையில் மந்திரிசபை நடைபெறப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுபவர்களின் ஆசையை பங்கப்படுத்தும் காரியம் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். சுகாதார ஆரிய மந்திரி, பழைய சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது போலவே தெரியவருகிறது. இதற்கு மந்திரிசபையில் உள்ள திராவிட மந்திரிகள் இடம் கொடுப்பது பெரிதும் அவமானமானதும் கோழைத்தனமானதுமாகும்.

முன்னைய காங்கரஸ் மந்திரிகள் பள்ளிக்குப் பிள்ளைகள் சேர்க்கும் விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் ஏற்பாடு செய்திருந்த காலேஜ் கமிட்டி முறையை எடுத்துவிட்டார்கள். பிறகு வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்திரவுகளுக்கு தப்பு வியாக்கியானம் செய்து அதை பயனற்றதாக்க வேலை செய்தார்கள். இப்போதும் அதுபோலவே பதவிக்கு வந்தவுடன் அதே வேலையில் பிரவேசித்து இருப்பது நல்ல காரியமல்லவென்றே சொல்லுவோம்.

அதென்னவெனில்,

வைத்தியகல்லூரியில் பிள்ளைகள் சேர்க்கும் விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி சேர்க்கப்பட வேண்டும் என்கின்ற உத்திரவை பாழாக்கவென்று ஒரு புதியமுறை கண்டுபிடித்து இருப்பதேயாகும். அந்த முறையாவது—சேர்க்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையில் 3-ல் 1-பாக மாணவர்களை வகுப்புப் பிரிவு பார்க்காமல் தகுதி பார்த்து அதாவது அதிக மார்க்கு வாங்கின மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டு மூன்றில் இரண்டு பாகமுள்ள எண்ணிக்கையை வகுப்புப்படி கொடுப்பது என்பதாகும்.

கீழ் பரீட்சையில் தேரி வைத்திய வகுப்பில் சேர்க்கப்பட தகுதியாக சர்ட்டிபிகேட் பெற்ற பிறகு மற்றொரு முறை தகுதிபார்ப்பது என்பது எதற்கு என்று கேட்கின்றோம். இதில் திராவிடப் பிள்ளைகளை ஒதுக்கிவிட்டு, ஆரியப் பிள்ளைகளுக்கு இடம் தருவது என்பதல்லாமல் வேறு என்ன கருத்து இருக்கமுடியும்?

வைத்திய வகுப்புக்கு சேர்க்கப்பட மாணவருக்கு வேண்டிய தகுதி சட்டப்படி அவர்கள் இண்டர்மீடியேட் என்றும், F. A. வகுப்பில் தேரி இருக்க வேண்டும் என்பதுதான்.

அப்படி இருக்க அதிக மார்க்கும் வாங்கவேண்டுமென்றால் அதற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்திரவு தேவை இல்லை என்றே சொல்லலாம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு தகுதியும், வேண்டுமானால் தகுதியானவர்கள் ஏராளமாக இருந்தால் அந்தந்த வகுப்புக்கு வந்த விண்ணப்பங்களில் அதிக தகுதி உள்ளவர்களை எடுக்க முயற்சித்தால் அப்போது அந்த உத்திரவுக்கு கேடில்லாத தகுதி கிடைக்கப்பெறலாம். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு கேட்டை உண்டாக்கும் எந்தத் தகுதியையும் இந்த ஆரிய ஆதிக்கத்தில் ஒழித்தே ஆகவேண்டும் என்போம். ஏனெனில் அது திராவிடர்களை ஒதுக்கவும் ஆரியர்களை நிரப்பவும் வேண்டுமென்ற வஞ்சக எண்ணத்தின்மீதே தகுதி கற்பிப்பதாகும் என்பது நமது அநுபவ பூர்வமான கருத்து.

ஆகவே இந்த பார்ப்பன மந்திரியாகிய ருக்குமணி லட்மிபதி அம்மாள் இதுவிஷயத்தில் செய்யும் சூட்சிநிறைந்த அநீதியை ஆங்காங்குள்ள திராவிட மக்கள் அவர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கண்டித்து தீர்மானம்செய்து மந்திரிக்கும், பிரதமருக்கும், காந்தியாருக்கும், கவர்னருக்கும், பத்திரிகைகளுக்கும், தந்தி

யும், ஏர்மெயிலில் கடிதமும் எழுதி அனுப்பும் வண்ணம் என்று வேண்டிக் கொள்கிறோம்.

காலேஜ் திறப்பதற்குள் இந்த உத்திரவு மாற்றப்பட வேண்டியதாதலால் மாணவர்களும் இதில் பங்குகொண்டு கூட்டத்திற்கு முதலில் ஊர்வலமாய் நடத்திச் சென்று கூட்டம் போட்டு தீர்மானிக்க வேண்டுகிறோம்.

இந்த உத்திரவு மாற்றப்படாவிட்டால் இனி ஒவ்வொரு வகுப்புக்கும் இந்த கதியே வந்து சேரும் என்பதோடு வைத்திய உலகம் ஆரியர்கள் கைக்கே போய் சேர்ந்துவிடும் என்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

## கடவுளின் கருணையே கருணை!

மழையில்லை, அரிசி இல்லை என்று மக்கள் திண்டாடுகிறார்கள். ஆனால் அதன்போதும் பார்ப்பனர்கள் வயிறு புடைக்கிறது.

மழைக்காக வருண ஜபம் செய்வதாகக் கூறிக்கொண்டு கண்ட கண்ட இடங்களில் இருக்கும் பார்ப்பனர்கள் வந்து கூடிக்கொண்டு வருண ஜப சமாராதனை என்னும் பேரால் தின்று கொழுக்கிறார்கள். கடவுள் பார்ப்பனர்கள் விஷயத்தில் காட்டிய கருணை இந்த உலகில் வேறு யாருக்குமே காட்டவில்லை என்பது இதனால் விளங்குகிறது.

## அறிக்கை

வடஆற்காடு திராவிடர் கழகச் செயலாளர்கள் தங்கள் கழக நிர்வாகஸ்தர்கள் பெயர், விலாசம் முதலிய விபரங்களை நாட்டாம்பள்ளியில் உள்ள வடஆற்காடு ஜில்லா திராவிடர் கழகத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்குத் தெரிவிக்கக் கோருகிறார். விரைவில் மாவட்டக் கழகத் தேர்தல் நடக்கவேண்டியுள்ளது.

## திருமண அழைப்பு

திருமணம் முதலாகிய சமுதாய சடங்குகளுக்கு பெரியார் ஈ. வெ. ரா. இனி அழைக்குமிடங்களுக்கெல்லாம் போக வசதி இல்லை என்றும், அப்படி போவதானால் இயக்கவேலைகள் குந்தகப்படுகிறதென்றும், இயக்கத் தோழர்களும் உடல் நலம் முதலியவை கருதி பெரியார் இந்தக் காரியங்களுக்குச் செல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றும் கருதி இனி அப்படிப்பட்ட காரியங்களுக்கு அழைத்து அசௌகரியப் படுத்தக்கூடாது என்றும் இயக்கத் தோழர்களுக்கு வேண்டுகோள் குடி அரசின் மூலம் விட்டதோடு அப்படி கண்டிப்பாக பெரியாரே வரவேண்டுமென்று அவசியமாய்க் கருதுகிறவர்கள் குறைந்தது 50 ரூபாயாவது விடுதலைக்கு நன்கொடை அளித்து அழைக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டோம்.

அப்படி இருந்தும் அதை சரியாய் கவனிக்காமல் பல தோழர்கள் அழைக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி எழுதுவதற்கு பதிலாய் அந்த அறிக்கையை தயவு செய்து படித்து அதற்கு மதிப்புக்கொடுக்க வேண்டுகிறோம்.

## அடுத்தவாரம்

16-6-46 ஈரோட்டில் நடந்த கோவைமாவட்ட திராவிடர் மாநாட்டின் நடவடிக்கைகள் அடுத்த இதழில்.

## நீத்தார் நினைவுநாள்

திராவிட கழகத் தலைவர் தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் மனைவி சின்னம்மாள், இயற்கை எய்தினமை குறித்து 27-6-46 காலை 6 மணிக்கு நினைவுநாள் நடைபெறும்

## செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு

13, 14-7-46 ஆகிய இருநாட்களிலும் செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு காஞ்சிபுரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெறும்.

“சந்திரோதயம்”, “இரணியன் அல்லது இணையற்ற வீரன்” ஆகிய இரு நாடகங்களும் நடைபெறும்.

டிக்கட் விபரம்:-

| | | |
|---|---|---|
| போஷகர் கட்டணம் | ரூ. | 100-0-0 |
| ஆதாரவாளர் | ,, | 25-0-0 |
| வரவேற்பாளர் | ,, | 10-0-0 |
| பிரதிநிதி | ,, | 5-0-0 |
| பார்வையாளர் | ,, | 2-0-0 |
| பெண்கள் | ,, | 1-0-0 |

## திறப்புவிழா

சென்னிமலையில் 12-6-46ல் செங்குந்தர் ஹைஸ்கூல் திறப்புவிழா கான்சாகிப் ஜனாப் கே. எ. ஷேக் தாவுத் சாகிப் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. என். சபாபதி முதலியார் திறப்புவிழாவாற்றினார். தோழர்கள் எஸ். மீனாட்சி சுந்தர முதலியார், எம். ஆர். பெருமாள் முதலியார், சி. நடராஜன் முதலியார் முதலியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எம். பி. நாச்சிமுத்து நன்றி கூறலுடன் முடிவுற்றது.

## மறைவு

கோபி பங்களாப்புதூர் மிராஸ்தார் தோழர் B. K. கருத்திருமகவுண்டர் அவர்களின் தாயார் ஜனக்கம்மாள் காலமானது குறித்து இரண்டு ரூபாய் குடி அரசுக்கு நன்கொடையளித்துள்ளார்கள்.

## விற்பனைக்கு

“பார்ப்பனப் படுமோச விளக்கம்” என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப்பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 22-6-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 48,123

இம்மாதம் 22உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. சேலம் | 8041 |
| 2. தஞ்சை | 7824 |
| 3. கோவை | 6459 |
| 4. திருச்சி | 5546 |
| 5. திருநெல்வேலி | 3548 |
| 6. வடஆற்காடு | 3538 |
| 7. இராமநாதபுரம் | 3515 |
| 8. சென்னை இவ்வாண்டில் 1362 | 3232 |
| 9. தென் ஆற்காடு | 2553 |
| 10. மதுரை | 1963 |
| 11. செங்கல்பட்டு | 1025 |
| 12. மற்ற இடங்களில் | 879 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு வருத்தத்தைத் தெரிவிக்கிறோம்.

காங்கரஸ் திராவிடத் தோழர்களே! இளைஞர்களே! ஏமாந்து போகாதீர்கள்! ஆரியருக்கு [illegible] வாலிபத்தை [illegible] கள், நாங்கள் ஏமாந்து [illegible] வர்கள். நாங்களும் காங்கரஸ் கொடி தூக்கித் திரிந்தவன்தான். கதர் கட்டினவன் மாத்திரமல்ல, ராட்டினம் சுமந்து நூற்று, செய்த நூலெல்லாம் தலையில் சுமந்து விற்றவன். ஜின்னா சாயபு யார்? காங்கரஸ் வாலண்டியர், கொடி தூக்கி "ஜே" போட்டவர் மகம்மது அலி, சவுகத்அலி கொடி தூக்கி "ஜே" போட்டவர்கள். டாக்டர் நாயர், தியாகராயர் காங்கரஸ் தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார்களாக இருந்தவர்கள். எனவே எங்கள் அனுபவம் உங்களுக்குப் போதாதா? நீங்கள் அனுபவம்பெற எங்களைப்போல ஆகுங்காலத்தில் உங்களால் தனியே நிற்க முடியாது, மற்றவர்கள் போல் அஞ்ஞாதவாசம் செய்யவேண்டியவர்களாகி விடுவீர்கள்: நல்ல திராவிடராகப் பிறந்து, ஏன் விபீஷணர்களாக ஆகிறீர்கள்? பதவிக்கு, பட்டத்துக்கு, பணத்துக்கு இருப்பவர்கள் அங்கு இருக்கட்டும். விட்டுவிடுங்கள். அவர்களைப்போல் அப்படி ஒரு கூட்டம் உலகம் தோன்றிய நாள்தொட்டு திராவிடரிலும் இருந்துதான் வந்திருக்கிறார்கள். ஆனால் அக்கூட்டத்தில் தியாகவீரர்களான திராவிடமணிகளே நீங்கள் சேரவேண்டாம். வீணுக்குழைக்காதீர்கள். மாற்றானுக்கு மண்டியிடாதீர்கள். என்றுதான் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!! மானலட்சியம் வைத்து சிந்தியுங்கள்!!!

## இயக்கச் செய்திகள்

திருநெல்வேலி மாவட்டம் இராமாநுசம் புதூரில் அம்பேத்கார் வாசகசாலை திறப்புவிழா 10-5-46ல் அதற்காக அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் மாணவ மாணவிகளின் [illegible] தோழர் வெ. அ. பழனி [illegible] தலைமையில் நடைபெற்ற [illegible] தோழர்கள் பெருமாள், அருணாசலம் பேசினார்.

0 0

5-5-46ல் கணியூர் பகுத்தறிவுப் படிப்பக விதிக்காக தோழர் என். அர்ச்சுனன் தலைமையில், A. D. சுந்தரம் அவர்கள் இசைவிருந்து நடைபெற்றது. தலைவர் பகுத்தறிவுப் படிப்பகத்தின் அவசியத்தைப் பற்றி பேசினார். தோழர் கே. எ மதியழகன் அவர்களையும் தோழர்களையும் பாராட்டிப் பேசினார்.

0 0

5-5-46ல் நாகை அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கத்தில் தோழர் வேணுகோபால் தலைமையில் தஞ்சை எஸ். ஆர். சுப்பண்ணா பேசினார்.

0 0

27-4-46ல் கருந்திராவைச் சமூக சீர்திருத்த கழகம் திறக்கப்பட்டு தோழர் எம். கிருட்டினன் அவர்களை தலைவராகக்கொண்ட கமிட்டியும் நியமிக்கப்பட்டது.

0 0

27-4-46ல் திருப்பையூரணி ஆதி திராவிட வாலிப சங்க கால்பந்து விளையாட்டார் சார்பில் திராவிடர் கொடி யேற்றுவிழா நடைபெற்று, தோழர் அந்தோனி தலைவராகக் கொண்ட செயற்குழு நியமிக்கப்பட்டது.

0 0

14-4-46ல் தென்னிந்திய பௌத்த சங்க பொதுக்கூட்டம் சென்னையில் நடைபெற்று நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

0 0

முத்துப்பேட்டை 9-5-46ல் தோழர் சிவசங்கரன் தலைமையில் தோழர்கள் சனார்த்தனம், சாமிநாதன், சீராமுலு பேசினார்.

## பெயரிடல்

வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர்—பெரியகரம் கிராமம் தோழர் பி. வி. சின்னசாமி—[illegible] அம்மைக்கு 6-4-46ல் பிறந்த குழந்தைக்கு திராவிடமணி என்ற பெயர் இடப்பட்டது. அதன் நினைவாக குடி அரசுக்கு ரூ.1. அளிக்கப்பட்டது.

0 0

புலியூரான் தோழர் டி. முத்தையா அவர்களுடைய மனைவி தில்லையம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்து 'திராவிடமணி" என்று பெயரிட்டதின் நினைவாக குடி அரசு வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அனுப்பப்பட்டது.

0 0

1946 ஜனவரி மாதம் உறையூர் தாலுக்கா தோழர் எ வி. பெரியண்ணன்—அஞ்சலையம்மாளுக்குப் பிறந்த ஆண் மகவுக்கு 23-4-46 ஞாயிறில் நடந்த 2வது தாலுக்கா மருத்துவர் மாநாட்டில் பெரியார் அவர்களால் அக்குழந்தைக்கு "சமதர்மன்" என்ற பெயரிடப்பட்டது. இதன் ஞாபகார்த்தமாக குடி அரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ரோஜா முத்தையா

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள திராவிட மாணவர் தொகை வேகமாகச் சரிந்து வீழ்ந்து, பத்தாவதை அடையும்பொழுது பாழடைந்து இருக்கிறது. இந்தப் பகுதியை விளக்குவதற்கு கீழ்க்கண்ட எண்ணிக்கைகளைப் பார்க்கவும். இதைத் தயாரிப்பதில் முதல் வகுப்பு மாணவர்களை 1000 என்று வைத்துக்கொண்டால் இப்பொழுதுள்ள விகிதாச்சாரப்படி இரண்டு இன மாணவர்களிலும் இரண்டாவது வகுப்பில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இதே முறையில் முதல் வகுப்பு மாணவர்களில் எவ்வளவு பங்கு மூன்றாவதில் இருக்கிறார்கள் என்று கணக்கிடவேண்டும். அதன்படி பார்த்தால்,

| | பார்ப்பன மாணவர்கள் | திராவிட மாணவர்கள் |
|---|---|---|
| 1வது வகுப்பு | 1000 | 1000 |
| 2வது ,, | 773 | 637 |
| 3வது ,, | 699 | 500 |
| 4வது ,, | 674 | 418 |
| 5வது ,, | 670 | 379 |
| 1வது பாரம் | 423 | 100 |
| 2வது ,, | 380 | 75 |
| 3வது ,, | 355 | 61 |
| 4வது ,, | 257 | 28 |
| 5வது ,, | 215 | 21 |
| 6வது ,, | 199 | 18 |

மேலே குறிப்பிட்டபடி இந்தக் கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை விகிதாச்சாரத்தைக் குறிப்பவை. அதாவது முதல்வகுப்பிலுள்ள ஒவ்வொரு ஆயிரம் பார்ப்பன மாணவர்களுக்கும் 2வது வகுப்பில் 773ம், மூன்றாவது வகுப்பில் 699ம் இருக்கிறார்கள். திராவிட மாணவர்களில் முதல் வகுப்பில் 1000 பேரிருந்தால் 2வது வகுப்பில் 637ம், 3வதில் 500ம் இருக்கிறார்கள்.

இந்தக் கணக்கைப் பார்த்தால் திராவிட மாணவர்களின் கல்வி நிலை பின் மோசம் விளங்கும். குறிப்பாக எலிமெண்டரி பள்ளியைவிட்டு நடுநிலைப்பள்ளி (மிடில்ஸ்கூல்) வரும்பொழுது பார்ப்பன மாணவர்களின் விகிதாச்சாரம் 423 ஆகிறது. திராவிட மாணவர்களின் விகிதாச்சாரம் 100 ஆகிறது: உயர்தரப்பள்ளி (ஹைஸ்கூல்)க்கு [illegible]பொழுது பார்ப்பனர் விகிதாச்சாரம் 257 ஆகவும், திராவிட மாணவர்களின் விகிதாச்சாரம் 28 ஆகவும் குறைந்து, 6வது பாரத்தை அடையும்பொழுது பார்ப்பனர்களின் விகிதம் ஆயிரத்துக்கு 199 ஆகவும், திராவிடமாணவர்களின் விகிதம் 18 ஆகவும் குறைந்து விடுகிறது.

படிப்பு வராத இனம், ஒரு இனத்துக்கு மட்டும் கல்வி வராமல் இருப்பானேன்? என்ற கேள்வியைவிட, ஒரு இனத்திடம் மட்டும் கல்வி வராமல் இருப்பதேன்? என்ற கேள்வியைத் தேசியத்தோழர்களுட்பட அனைவரும் கேட்கவேண்டும். ஏன்? நம் இனத்து மாணவர்கள் முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வருவதற்குள் படிப்பை முடித்துவிட்டு வயிற்றுக்கு வழிவகுக்க வெளியே வந்துவிடுகின்றனர்?

மேலே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்களில் தாழ்த்தப்பட்டோர்களின் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது. அவர்களது கல்விநிலை கவனிப்போரின் கண்களில் புனலையல்ல, கனலைத்தான் எழுப்பும். சமூகக் கட்டுப்பாடென்னும் பயங்கரச் சுழலில் சிக்கியவர் நீண்டபடாத, தாழ்த்தப்பட்டோர் தொகை 1941 சென்சஸ்படி 80,08,492. இந்த 80 லட்சம் நீண்டத்தகாதவர்களில் பத்தாவது வகுப்பைப் படிப்பவர்களின் தொகை 600. நூற்றுக்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்களில் பத்தாவது வகுப்பில் படிப்பவர் தொகை 9433. நூற்றுக்கு 16-பேராக உள்ள தாழ்த்தப்பட்டோரின் தொகை 600. இது 1944ல் தாழ்த்தப்பட்டோரின் உயர்தரப்பள்ளிக் கல்வி நிலை. பிரசார பலமும், பண பலமும், தற்பொழுது அரசியல் பலமும் பெற்றுவிளங்கும் தேசியத் திருச்சபையின் அரைநூற்றாண்டு வாழ்வுக்குப்பின், ஆட்சேம் சுண்டுவிரல் கண்டு ஆடும் மக்கள் கூட்டத்தைப் பெற்றுள்ள மகாத்மாவின் கால்நூற்றாண்டு அரசியல் வாழ்விற்குப்பின், சென்னை மாகாணத்தில் 80லட்சம் பெருங்குடி மக்களிடையே பத்தாவது வகுப்பைப் பார்ப்பவர்களின் தொகை 600. சக்தி பக்தர்கள் தாழ்த்தப்பட்டோருக்கு ஹரிஜன பட்டம் மட்டுமல்ல, பரிஜனப் பட்டமளித்தாலும் அவர்கள் நிலை மாறவில்லை. அதைப்பற்றி வடநாட்டவர் நினைக்கமாட்டார், மயிலையில் வாழும் மகோன்மத்தரும் கருதமாட்டாராயினும் தேசியத் திராவிடத் தோழர்களாயினும் கவலை காட்டியிருக்கவேண்டாமா இந்த அநீதியின் போக்கைக் கண்டு. அவர்கள் கேட்டிருக்கவேண்டாமா? வார்தாத்திட்டத்தில் இந்தவகையற்றோரின் கல்வியறிவை வளமாக்க வழி இருக்கிறதா என்று. தக்ளி நூற்றால் தாழ்த்தப்பட்டோரின் நிலை உயருமா என்று. ராம்துன் பஜனையும், ராமநாம இசையும், கதராடையும், கர்ம வீரமும், அறியாமையிருளிலும், அடக்குமுறைக் கொடுமையிலும் ஆழ்ந்திருக்கும் அடிமைகளை எழச்செய்யுமா என்று. தேசியத் தோழர்கள் அடிப்படையான திட்டங்களை கேள்விகேட்டதில்லை, நினைத்ததுமில்லை. ஆனால் திட்டங்களைப் பரிசீலனை செய்தவர்கள்மீது சீறியதுண்டு. அவர்களுக்குச் சமூக நிலை அரசியலில் சீறிய துண்டு.

கல்விக்கெனச் செலவு செய்யப்படும் 7 கோடியில்,

முதல் நிலை (பிரைமரி) கல்விக்கு ரூ. 3,13,89,434

நடுநிலை (மிடில்ஸ்கூல்) கல்விக்கு ரூ. 16,94,939

உயர்தர (ஹைஸ்கூல்) கல்விக்கு ரூ. 1,26,40,116

மொத்தம் ரூ. 4,57,24,489

இவ்வாறு பத்தாவது வகுப்புவரை செலவு செய்யப்படும் 4கோடி 57லட்சத்தில் பலன் என்னவென்று பார்த்தால், திராவிடமக்களின் குறைந்த கல்வி நிலையும், நூற்றுக்கு 3ஆக உள்ள பார்ப்பனர்களின் உயர்நிலையும்தான். இப்படிப் பார்த்துப்போனால் சராசரி ஒவ்வொரு ஆண்டும் 5 கோடியிலிருந்து 7கோடி வரை கல்விக்காகச் செலவிடப்படுகிறது. அதன் பலனாக [illegible] ஏற்பட்டுள்ள நிலை என்ன?

1941ல் எடுக்கப்பட்ட சென்சஸ் பற்றிய முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை, ஆகவே அதற்கு முந்திய கணக்குப்படி எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விகிதம் பின்வருமாறு

| எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் | ஜனத்தொகையில் 100க்கு | ஆண்களில் 100க்கு | பெண்களில் 100க்கு |
|---|---|---|---|
| பார்ப்பனர் | 53 | 80 | 28 |
| திராவிடர் (பார்ப்பனரல்லாதார்) | 8க்கு (7.7) | 14 | 2க்கு (1.6) |

| ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் | ஜனத்தொகையில் 100க்கு | ஆண்களில் 100க்கு | பெண்களில் 100க்கு |
|---|---|---|---|
| பார்ப்பனர் | 17 | 33 | 2 |
| திராவிடர் (பார்ப்பனரல்லாதார்) | 1க்கு (0.6) | 1-ச-அ (1.2) | |

அதாவது பார்ப்பனர்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 53, திராவிடர்களில் 100க்கு 8லும் குறைவு. பார்ப்பன இனத்தில் ஆண்களில் 100க்கு 80பேர் எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள். நம்மினத்தில் ஆண்களில் 100க்கு 14 பேருக்குத்தான் படிக்கத்தெரியும். எழுதப்படிக்கத் தெரிந்த பெண்களில் பார்ப்பன இனத்தில் 100க்கு 28ம், நம்மினத்தில் 100க்கு 2க்கும் குறைவாகவும் விகிதம் இருக்கிறது.

ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் விகிதம் இன்னும் கேவலமானது. ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் பார்ப்பனர்களில் 100க்கு 33பேர். அதாவது 3ல் ஒருவருக்கு ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரியும். திராவிட இனத்திலோ 100க்கு ஒருவர்தான். ஆங்கிலம் எழுதப்படிக்கத்தெரிகிற பார்ப்பனரல்லாத பெண்களின் கூட்டத்தில்100க்கு இவ்வளவு என்று விபரம் கொடுக்கப்படவில்லை. அதற்குப் புள்ளிவிபரம் இல்லாத குறையால் அல்ல, இருக்கிறது. ஆனால் அதை 100க்கு, அல்லது 1000க்கு என்று கூற முடியாது 10,000க்கு வேண்டுமானால் கணக்கிட்டுக் கூறலாம். ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிகிற பார்ப்பனரல்லாத பெண்களின் விகிதம் 10,000ல் 9பேர். எப்படியிருக்கிறது உலகத்திலே வேறெங்கும் காணமுடியாத அளவிற்கு பெண்பாற் புலவர்களைத் தன்னகத்தே கொண்டு, கல்வி மேடையில் பெருமிதத்துடன் வீற்றிருந்த நாட்டின் நிலை!

கல்வியறிவு ஒரு இனத்தின் முதுகெலும்புபோன்றது. மேற்காட்டியுள்ள புள்ளி விபரங்கள் திராவிடத்தில் கல்வி எவ்வளவு பிற்போக்கில் இருக்கிறது என்பதையும், கல்வித் துறையில் ஒரு குறிப்பிட்ட இனம் மாத்திரம் உயர்ந்து விளங்குவதையும் நன்கு குறிப்பிடுவன. கல்வித்துறைக்கெனச் செலவிடப்படும் பொருள் 100க்கு 97 பங்கு வரிசெலுத்துகிற பெருங்குடி மக்களுக்குப் பயன்படும்படி செய்யப்படவில்லை. ஒரு இனத்திற்கு மாத்திரம் படிப்பு ஏன் வரவில்லை? என்பதையும், அந்த இனத்திடம் மாத்திரம் கல்வி ஏன் செல்லவில்லை என்பதையும், நாட்டின் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் கேட்கவேண்டும்.

வெள்ளைக்கார அரசியல் தந்திரத்தில் சென்னைக்கு இடமிருந்ததேயன்றி, நீதிக்கு இடமில்லை. வேதியனின் சாண்டல் இயந்திரமோ அநீதியின்மீது கட்டப்பட்டது. எனவேதான் நம்முடைய கல்வி விஷயத்தில் அரசியலார் அக்கரை காட்டவில்லை, அரசியல் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள கூட்டத்தினர் அலட்சியம் செய்தனர். வறியோரிடம் கல்வியின் வாடை செல்லாதவாறு, சமூக வெறியர்களும், அரசியல் ஆணவக்காரர்களும் அதனைத் திரையிட்டு வைத்துள்ளனர். ஆனால் புயல் வீசும்பொழுது பஞ்சாய்ப் பறந்துவிடும்.

## நீத்தார் நினைவு

அருப்புக்கோட்டைத் தோழர் கே. இராமசாமியின் தாயார் அவர்களின் 2வது வருட நீத்தார் நினைவுநாள் தோழர் பொ. சுப்ரமணியன் தலைமையில் நடந்தது. தோழர்கள் எம். எஸ். இராமசாமி, எ. தர்மராஜ், எஸ். சண்முகப் பெருமாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். குடியரசு வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

திருத்துறைப்பூண்டி அம்மனூரில் 15-5-46ல் தோழர் நடேச சேனாடிப் பிரியர் தலைமையில் தோழர் வீ. நடராசன் தாயாருக்கு நீத்தார் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. தோழர் இராசகோபாலன் பேசினார். குடியரசுக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

---

பெருக வாழ்ந்தான் 4-5-46ல் தோழர் சிங்காரம் தலைமையில் தோழர்கள் ஆர். சாமிநாதன், சீராமுது பேசினர்.


# திராவிட நாடு

புகைப்படம் (போட்டோ)

நவீன முறையிலும், அபாரமாக வரையப்பட்டதுமான திராவிட நாடு அமைந்த படத்தில் நமது அருந்தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. நமது பெருமைக்குரிய திராவிடர் தளபதி சி. என். அ. இவர்களது புகைப்படங்களை பதியவைத்து, உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்ட ஸ்கிரீனுடன் மிகமிக சேர்த்தியாகப் படம் பிடிக்கப்பட்டு போஸ்டு கார்டு அளவில் வெளிவந்துள்ளது.

ஒன்றின் விலை 0—8—0

வியாபாரிகட்கு தக்க லாபம் தரப்படும்.

மேலும், நாடகக்கலையின் முன்னேற்றம், பகுத்தறிவுப் பாமாலை நூல்களும், தலைவர், தளபதி படங்களும் எங்களிடம் கிடைக்கும்.

விபரங்கட்கு:

திராவிடன் பதிப்பகம்,
183, லாங்குபசார், வேலூர். (வ. ஆ.)


Edited Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.